**செய்தி வெளியீடு எண்:223** **நாள்:22.04.2021**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த் தொற்று அதிகரித்து வரும் சூழலை கருத்தில் கொண்டு இன்று (22.04.2021) தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான விரிவான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுடன் காணொலி காட்சி மூலமாக ஆய்வுக் கூட்டமும் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் திரு கே. சண்முகம், இ.ஆ.ப., அரசு ஆலோசகர், திரு. திரிபாதி, இ.கா.ப., காவல் துறை தலைவர், திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, திரு. கிருஷ்ணன், இ.ஆ.ப. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நிதித் துறை, திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர், மரு. ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர், டாக்டர். என். கண்ணன், இ.கா.ப., காவல் துறை கூடுதல் ஆணையாளர், சென்னை (தெற்கு), பிற துறைகளின் கூடுதல் தலைமைச் செயலாளர்கள் மற்றும் அரசு செயலாளர்கள் மற்றும் இதர அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அண்மை காலங்களில் உலக அளவில் மட்டுமல்லாமல், இந்தியாவில் தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களில் நோய்த் தொற்று மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டை பொறுத்தவரை தமிழ்நாடு அரசின் பன்முனை நடவடிக்கைகளினால், நோய்த் தொற்று விகிதம் கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், ஒரு சதவிகிதமாக குறைக்கப்பட்டது. மேலும், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு சுமார் 500 நபர்களுக்கு கீழாக கொண்டுவரப்பட்டது. ஆனால் கடந்த 5 வாரங்களில் படிப்படியாக நோய்த் தொற்றின் அளவு உயர்ந்து, தற்போது நோய்த் தொற்று விகிதம் 10.4 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக சென்னை, செங்கற்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருப்பூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மற்றும் நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில் தொற்று கூடுதலாக உள்ளது. நாளொன்றுக்கு செய்யப்படும் சுமார் 1,15,000 RT-PCR சோதனைகளில் நோய்த் தொற்று உறுதிசெய்யப்படும் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து, தற்போது நாளொன்றுக்கு நோய்த் தொற்று 12,000 நபர்களை தாண்டியுள்ளது.

இந்த இரு கூட்டங்களில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தற்போதுள்ள நிலைமை குறித்து எடுத்துரைத்தார்.

இந்திய அளவில் கொரோனா தொற்றின் இரண்டாவது அலையின் தாக்கம் பன்மடங்கு அதிகரித்து ஒரே நாளில் 3.15 இலட்சம் நபர்களுக்கு கொரோனா தொற்று பதிவாகி வருகிறது. மகாராஷ்டிரம், உத்திரபிரதேசம், டெல்லி, கர்நாடகா, கேரளா, இராஜஸ்தான், பீகார், சத்தீஸ்கர் மாநிலங்கள் மட்டுமல்லாமல் கொரோனா தொற்று ஏற்கனவே குறைவாக இருந்த மாநிலங்களிலும் பல்வேறு காரணங்களால் பன்மடங்கு அதிகரித்து வருகிறது. கடந்த மார்ச் 2020 முதல் கொரோனாவை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் பலமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர்களுடன் கூட்டங்களும், மருத்துவ வல்லுநர்களுடன் கூட்டங்களும் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டது. தலைமைச் செயலாளரும் அவ்வப்பொழுது தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வந்தார். இந்நிலையில் தேர்தல் நாள் அறிவித்த பின்பும் கோவிட் தொற்று மீண்டும் அதிகரிக்கும் நிலையை கருத்தில் கொண்டு, தலைமைச் செயலாளர் அளவில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் உடன் ஆய்வுக் கூட்டத்தை மேற்கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளது.

அதன் அடிப்படையில் தலைமைச் செயலாளர் அவர்கள் மாநில தேர்தல் அதிகாரி முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் 16.03.2021–ஆம் நாளன்றும், மருத்துவ வல்லுநர்கள் மற்றும் மூத்த அரசு செயலாளர்களுடனும் 23.03.2021 மற்றும் 30.03.2021 ஆகிய தேதிகளில் கூட்டங்கள் நடத்தி கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நோய் தடுப்புகான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வாக்குப் பதிவு முடிந்ததும், கோவிட் ஆய்வுக் கூட்டங்களை நடத்தலாம் என்ற அனுமதியை பெற்ற பின்பு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 12.04.2021 அன்று மருத்துவ வல்லுநர்களுடனும், மூத்த அரசு செயலாளர்களுடனும் கூட்டம் நடத்தப்பட்டு பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதேபோல் கடந்த 18.04.2021 அன்றும் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு கொரோனா பணிகள் மேலும் முடுக்கிவிடப்பட்டு மேலும் நோய் தொற்றை குறைக்கும் வகையில் பல கட்டுப்பாடுகள் மீண்டும் விதிக்கப்பட்டன.

தமிழ் நாடு அரசு கோவிட் தடுப்பு பணிகளை கடந்த 07.03.2020 அன்று முதலே மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் RT-PCR பரிசோதனைகள் மட்டுமே பயன்படுத்தி வரும் மாநிலம் தமிழ்நாடு மட்டும் தான். இதுவரை 2.15 கோடி RT-PCR பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. RT-PCR 'கிட்'டைப் பொருத்தவரை இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில்

பரிசோதனை முடிவுகள் விரைவில் வரக்கூடிய, மிகவும் நம்பகமான FDA-வால் அங்கீகரிக்கப்பட்ட RT-PCR–‘கிட்’டைத்தான் தமிழ் நாடு அரசு குறைந்த விலையில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலம் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. இந்த பரிசோதனை ‘கிட்’டுகள் பிரேசில் நாட்டில் இருந்து அதிக விலையில் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பது தவறான செய்தியாகும். இந்த தவறான செய்தியை வெளியிட்ட இதழுக்கும் அரசால் ஏற்கனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தரத்திலான, மிகக் குறைந்த நேரத்தில் பரிசோதனை செய்யக்கூடிய நம்பகமான ‘கிட்’டுகள், இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில் தென்கொரியாவில் இருந்தும், அமெரிக்காவில் இருந்தும் தமிழ்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இவை மூலமாக பரிசோதனை முடிவுகள் மிகக் குறைந்த காலத்தில் அளிக்கப்படுவதோடு 80 விழுக்காடு பரிசோதனைகள் அரசு மருத்துவமனைகளிலேயே செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசு ஆரம்பம் முதலே உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய படுக்கை வசதிகளை அதிகரிப்பது, தேவையான உயர்ரக மருந்து மாத்திரைகள், உயிர்காக்கும் கருவிகளான Ventilator, High Flow Nasal Canula போன்ற கருவிகளை தேவையான அளவு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலமாக கொள்முதல் செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு கடந்தாண்டு கோவிட் தொற்று கண்டுபிடித்தவுடன் 305.04 கோடி ரூபாய் செலவில் ஆக்ஸிஜன் வசதிகளுடன் கூடிய படுக்கைகளை இரண்டு மடங்கிற்கு மேல் உருவாக்கியுள்ளது. தற்பொழுது கோவிட் மருத்துவமனைகளில் உள்ள 54,417 படுக்கைகளில் 32,942 படுக்கைகள் ஆக்ஸிஜன் வசதியுள்ள படுக்கைகளாகும். மேலும் இது தவிர 6,879 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர கோவிட் கவணிப்பு மையங்களில் 38,426 படுக்கைகளும் தயார் நிலையில் உள்ளன. இதுமட்டுமின்றி 6,517 வென்டிலேட்டர்களும், 2440 High Flow Nasal Cannula களும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை போர்க்கால அடிப்படையில் மேலும் அதிகரிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனையில் ஆக்ஸிஜனை பொறுத்தவரை தமிழ்நாடு அரசு கடந்தாண்டு உள்ள சேமிப்பு கிடங்கு வசதியை 395 MT லிருந்து 888 MTஆக உயர்த்தியுள்ளது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. அரசு மற்றும் தனியாறு மருத்துவ மனைகளில் மொத்தம் 1167 MT ஆக்ஸிஜன் சேமிப்பு கிடங்கு வசதியுள்ளது. தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு 240 MT ஆக்ஸிஜன் தேவைப்படும் சூழலில், வருங்காலங்களில் இதன் தேவை அதிகரிக்கலாம் என்பதையும்

கருத்தில் கொண்டு இதற்காக தனியாக ஒரு கட்டுப்பாட்டு மையத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது.

உயிர்காக்கும் உயர்ரக மருந்துகளான டோசிலிசுமாப் (Tocilizumab inj – 400 mg), ரெம்டெசிவர் (Remdesivir Inj - 100 mg), எனாக்சிபிரின் (Enoxaparin Inj – 40 mg) போன்ற மருந்துகள் தேவையான அளவில் கொள்முதல் செய்யப்பட்டு தாலுக்கா மருத்துவமனை வரை விநியோகிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ரெம்டெசிவிர் மருந்து கிடைக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. தற்போதும் அடுத்த 20 நாட்களுக்கு தேவைப்படும் அளவிற்கு இருப்பு உள்ளதோடு, மேலும் 2 இலட்சம் குப்பிகள் கொள்முதல் செய்ய கொள்முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, தேவையின் அடிப்படையில் தனியார் மருத்துவமனைகளுக்கும் இந்த மருந்தை அரசு அளித்து வருகிறது.

தடுப்பூசி பயன்பாட்டைப் பொறுத்தவரை தடுப்பூசி அறிமுகப்படுத்திய 16.01.2021 நாளிலிருந்து முதல் இரண்டு மாதத்தில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் ஆகியோரிடம் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் குறித்து தொடர் விழிப்புணர்வை ஏற்படுத்தியபோதும், தடுப்பூசியை தவிர்க்கும் எண்ணம் அவர்களிடம் தொடக்கத்தில் காணப்பட்டது. தமிழ்நாட்டில் 'கோவேக்சின்' தடுப்பூசி, ஒரு குப்பியிலிருந்து 20 நபர்களுக்கு போடும் வகையிலும், 'கோவிஷீல்டு' தடுப்பூசி, ஒரு குப்பியிலிருந்து 10 நபர்களுக்கு போடும் வகையில், குப்பிகளாக மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. தற்பொழுது தமிழ்நாட்டில் 4,497 தடுப்பூசி மையங்களில் இத்தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது. தடுப்பூசியை தவிர்க்கும் எண்ணம் மக்களிடையே இருந்ததினாலும், தடுப்பூசி போட்டுக்கொள்ள மாலை வேலையில், அந்த நாளுக்கான தடுப்பூசி வழங்கும் பணி முடிவுறும் நேரத்தில், இந்த மையங்களுக்கு வரும் 5 அல்லது 6 நபர்கள் மட்டுமே வந்த நிலையில் அவர்களை திருப்பி அனுப்பக்கூடாது என்ற உயரிய நோக்கத்தில் மட்டுமே அந்த எண்ணிக்கையிலான நபர்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. இதன் காரணத்தினால் மீதம் இருந்த 4 அல்லது 5 நபர்களுக்கு பயன்படுத்தக் கூடிய அளவிலான மருந்துகள் வீணாகும் நிலைமை ஏற்பட்டது. மேலும் ஒரு குப்பி மருந்தைத் திறந்தால் அதனை கட்டாயம் 4 மணி நேரத்திற்குள் பயன்படுத்தவேண்டும். ஒரு குப்பியை திறந்தபின், நான்கு மணி நேரத்திற்குப்பின் பயன்படுத்தினால், அதன் வீரியத்தன்மை குறைய வாய்ப்புள்ளது என்பதால் அதனை பயன்படுத்த இயலாது.

தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் வழக்கமான தடுப்பூசி போடுவதில் ஏற்படும் நடைமுறை சவால்களை கருத்தில் கொண்டு 10 விழுக்காடு வரை

மருந்து வீணாவது அனுமதிக்கப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால், இந்த வீணாகும் நிலைமை கடந்த **16.01.2021** முதல் **31.03.2021** வரையிலான காலகட்டத்தில் நிகழ்ந்ததாகும். தற்போது **01.04.2021** முதல் **20.04.2021** வரை தடுப்பூசி வீணாவது **5** விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை **3** விழுக்காடுக்கு கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் மக்களின் ஒத்துழைப்பு போன்ற காரணங்களால் ஒட்டு மொத்த தடுப்பூசி விரையம் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த **01.04.2021** முதல் **45** வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வருவதாலும், **01.05.2021** முதல் **18** வயது முடிந்த அனைவருக்கும் தடுப்பூசி வழங்க உள்ள நிலையில், கடைசி நேரத்தில் திறக்கக்கூடிய குப்பியில் உள்ள தடுப்பூசி மருந்து முழுமையாக பயன்படுத்த முடியும். இதன் மூலம் தடுப்பூசி மருந்து வீணாவது முற்றிலுமாக தவிர்க்கப்படும்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., அவர்களின் ஆய்விற்கு பின்பு கீழ்க்காணும் உத்தரவு மற்றும் அறிவுரைகளை சம்பந்தப்பட்ட துறையினருக்கு வழங்கினார்கள்.

1. கோவிட் கவனிப்பு மையங்களை பராமரிக்க முதற்கட்டமாக 61 கோடி ரூபாய் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சியர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து அனைத்து கோவிட் கவனிப்பு மையங்களை செயலாக்கத்திற்கு கொண்டுவர அறிவுருத்தப்பட்டார்கள்.

2. தலைமைச் செயலாளர் அவர்கள் போர்கால அடிப்படையில் பிராணவாயு வசதி கொண்ட படுக்கை எண்ணிக்கையை சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் மேலும் உயர்த்த பொதுப் பணித் துறைக்கு உத்தரவிட்டார்.

3. கோவிட் நோய் தொற்றின் அறிகுறிகள் தோன்றிய உடனே பொதுமக்கள் மருத்துவ உதவி பெறும் வகையில் பொது மக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தினார்கள். தேவையில்லாத தாமதம் நோய் வீரியம் உயர்வதற்கு வழிவகுக்கும் என தெரிவித்தார்கள்.

4. கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களை பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட சோதனை முகாம்களில் (COVID Screening Centre) உடனடியாக மருத்துவப் பரிசோதனை செய்து தொற்றின் வீரியத்திற்கு ஏற்றவாறு தரம் பிரித்து கோவிட் கவனிப்பு மையம் (COVID Care Centre) அல்லது பிரத்தியேக கோவிட் மருத்துவமனைகளில் (Dedicated COVID Hospital) அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்க

மருத்துவத் துறைக்கு உத்தரவிட்டார். மேலும், இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கோவிட் சோதனை முகாம்கள் (COVID Screening Centre) குறித்து விளம்பரப்படுத்தப்பட வேண்டும், இவ்வாறு செய்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, மக்களின் அச்ச உணர்வை போக்கி, தொற்றின் வீரியத்திற்கு ஏற்றவாறு உரிய இடத்தில் சிகிச்சை கிடைக்க வழிவகை செய்ய உத்தரவிட்டார். மேலும் கோவிட் கவனிப்பு மையம் (COVID Care Centre) எண்ணிக்கையை கடந்த ஆண்டை விட கூடுதலாக உயர்த்த வேண்டும் எனவும் ஏற்கனவே, கண்டறியப்பட்ட கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள், பள்ளிகள், இன்ன பிற கட்டடங்களை, மாவட்ட ஆட்சியர்கள் உரிய வழிமுறையை பின்பிற்றி பயன்படுத்த உத்தரவிட்டார். தேவையான படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் பொது மக்கள் தங்கள் சந்தேககங்களை '104' என்ற எண்ணை தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம் என்று அறிவுறுத்தியுள்ளார்.

5. கோவிட் தொற்று பாதித்தவர்களுக்கு உரிய சிகிச்சை கிடைக்க போதுமான அளவு பிராணவாயு இருப்பு நிலையை கூர்ந்து கவனித்து, தொழிற்சாலைகள் மற்றும் சுகாதாரத் துறை மூலமாக உறுதிசெய்ய உத்தரவிட்டார்.

6. பரிசோதனைகளை அதிகப்படுத்தி நாளொன்றுக்கு நோய்த் தொற்றின் விகிதம் 5 சதவிகிதத்துக்கும் கீழ்கொண்டுவர அறிவுறுத்தினார். மேலும் நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பரிசோதனைகளை அதிகப்படுத்தி (Increased and Aggressive Testing), முடிவுகளை 24 மணி நேரத்திற்குள் தெரியப்படுத்த உத்தரவிட்டார்.

7. நோய்த் தொற்று ஏற்பட்டவரின் உடன் இருப்பவர்கள் மற்றும் தொடர்பில் இருந்தவர்களில் (Contact Tracing) குறைந்தபட்சம் 25 முதல் 30 நபர்களை 72 மணி நேரத்திற்குள் விரைவாக கண்டறிந்து அவர்களுக்கு RT-PCR பரிசோதனை செய்யப்படவேண்டும். தொற்று கண்டறிந்தவுடன் நோய்த் தொற்று இருந்தால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு (Isolation) தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு (Treatment) நோய்த் தொற்று மேலும் பரவாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

8. தமிழ்நாடு முழுவதும் காய்ச்சல் முகாம்களை அதிகரித்து சளி, மற்றும் காய்ச்சல் உள்ளவர்களை விரைவாக கண்டறிந்து சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என உத்தரவிட்டார்.

9. மேலும் நோய்த் தொற்று பாதிக்கப்பட்ட தெருக்கள் மற்றும் குடியிருப்புகள் அடையாளம் காணப்பட்டு மூன்றுக்கு மேற்பட்ட நபர்கள் பாதிக்கப்பட்டு

இருப்பது உறுதிசெய்யப்பட்டால் அந்தப் பகுதி நோய் கட்டுப்பாட்டுப் பகுதியாக அறிவிக்கப்பட்டு (Micro-Containment Zone) நோய் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டார். தமிழ்நாட்டில் **22.04.2021** அன்று **3627** பகுதிகள் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளாக கண்டறியப்பட்டு தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

10. அனைத்து மருத்துவமனைகளிலும் கோவிட் தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தேவைக்கு அதிகமாக படுக்கை வசதிகள் ஏற்படுத்த வேண்டும். மேலும், பிராணவாயு கருவிகள் (Ventilators, High Flow Nasal Cannula), மருந்துகள் (Medicines), பாதுகாப்பு கவசங்கள் (Personal Protective Equipment) தயார் நிலையில் வைக்கப்படவேண்டும். மேலும் காலதாமதமின்றி சிகிச்சை அளிக்க ஏதுவாக '**108**' அவசரகால ஊர்திகளை முழு செயல்பாட்டில் வைக்க உத்தரவிட்டார்.

11. கோவிட் தொற்றினால் ஏற்படும் மரணங்களை குறைக்க அரசு வெளியிட்டுள்ள நிலையான சிகிச்சை நெறிமுறைகளை (Standard Treatment Protocol) அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளும் பின்பற்ற வேண்டும் என உத்தரவிட்டார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மருத்துவ வல்லுநர் குழு அமைக்கப் பெற்று, நிலையான சிகிச்சை நெறிமுறைகள் வகுக்கப்பட்டு அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு பின்பற்றப்படுகிறது.

12. கோவிட் தொற்றினை தடுக்க நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை நிறுவனங்கள், பொது இடங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பிற இடங்களில் அனைவரும் கடைபிடிக்கவேண்டும் என உத்தரவிட்டார். இந்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை மக்களுக்கு மீண்டும் வலியுறுத்த வேண்டும். இந்த நிலையான வழிகாட்டுநெறி முறைகளை ஊடகங்கள், துண்டு பிரசுரங்கள், சமூக வலைதளங்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் மூலமாக அனைத்து மக்களுக்கும் வலியுறுத்தப்படவேண்டும்.

13. தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் **1939**–ன்படி இந்த நிலையான வழிமுறைகளை மீறுபவர்களுக்கு சுகாதாரம், உள்ளாட்சி, காவல், வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாக அபராதம் விதிக்கப்படவேண்டும். மேலும் மக்கள் கூடும் இடங்களில் கோவிட் நிலையான வழிபாட்டு நெறிமுறைகளை அனைவரும் பின்பற்றப்படுவதை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கண்காணிக்கவேண்டும் என உத்தரவிட்டார். **16.03.21** முதல் **21.04.21** வரை **5,43,518** விதி மீறல்கள் கண்டறியப்பட்டு தமிழ்நாடு பொது

சுகாதாரச் சட்டம் **1939**–ன்படி ரூபாய் **11,50,25,500/–** அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

14. கோவிட் தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதியுடையவர்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவேண்டும், மக்களிடையே இத்தடுப்பூசி மீதுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மத்திய அரசின் நெறிமுறைகளின்படி **21.04.2021** வரை மொத்தம் **49,23,935** பயனாளிகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மக்களிடையே இது தொடர்பாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் **20.04.2021** வரை **61,85,720** தடுப்பூசி doses தமிழ்நாட்டிற்கு மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. ஏப்ரல் **30**ஆம் தேதிக்குள் குறைந்தது **10**லிருந்து **12** இலட்சம் தகுதி வாய்ந்த நபர்களுக்கு தடுப்பூசி போட அறிவுறுத்தப்பட்டது. மே **1** ஆம் தேதி முதல் தடுப்பூசி முகாம்கள் மூலம் தகுதிவாய்ந்தவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு வருகிறது.

15. மேலும் பொது சுகாதார இயக்குனரகம் மற்றும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் கட்டுப்பாட்டு அறை **24** மணி நேரமும் செயல்பாட்டில் வைக்கப்படவேண்டும். மக்களுக்கு தேவையான விவரங்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முழு நேர தொலைபேசி சேவை மையம் தொடர்ந்து இயக்க உத்தரவிட்டார்.

பொதுமக்கள் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்தும், தனி மனித இடைவெளி கடைப்பிடித்தும், முறையாக அடிக்கடி கைகளை கழுவியும் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக கடைபிடித்து, கொரோனா பெரும் தொற்றினை தடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முனைவர் ராஜீவ் ரஞ்சன்
**தலைமைச் செயலாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**